## திராவிட இயக்க அரசியல் பாதுகாக்கப்பட வேண்டும்!

# திராவிட இயக்க அரசியலால்தான் - வட இந்தியாவின் அரசியல் படையெடுப்பைத் தடுக்க முடியும்!

### சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் – மாவட்டச் செயலாளர் – முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. முன்னின்று நடத்திய

## ‘கலைஞர் பிறந்த நாள் விழா மாபெரும் பொதுக்கூட்டத்தில்’ தமீமுன் அன்சாரி எம்.எல்.ஏ. புகழாரம்!

**சென்னை, ஜூன் 12 -**

**திராவிட இயக்க அரசியல் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் திராவிட இயக்க அரசியலால்தான் - வட இந்தியாவின் அரசியல் படையெடுப்பைத் தடுக்க முடியும் என்றும் - சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் - மாவட்டச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. முன்னின்று நடத்திய ‘முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா மாபெரும் பொதுக்கூட்டத்தில்’ தமீமுன் அன்சாரி எம்.எல்.ஏ. புகழாரம் சூட்டினார்.**

இந்நிகழ்வில் தமீமுன் அன்சாரி எம்.எல்.ஏ. ஆற்றிய உரை வருமாறு:

“யானை படுத்தாலும் குதிரை உயரம்”என்று சொல்வார்கள். சென்னையிலே போராட்டக் களத்திலே ஒரு தற்காலிகப் பின்னடைவைச் சந்தித்திருந்தாலும், எங்களுடைய உணர்வுகளை எவராலும் அசைக்க முடியாது என்ற நம்பிக்கையை ஊட்டும் விதத்தில் இந்தப் பொதுக்கூட்டத்தை அவர்(சேகர்பாபு) ஏற்பாடு செய்திருக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஒரு சிறப்பு உண்டு. அது தேர்தல் வெற்றிகளை கவனத்தில் கொண்டு செயல்படக்கூடிய ஓர் இயக்கம் அல்ல. தமிழ்நாட்டின் மறுமலர்ச்சிக்காக, தமிழர்களுடைய எழுச்சிக்காக, திராவிட இனத்தினுடைய மீட்சிக்காகச் செயல்படக்கூடிய ஒரு சமுதாய இயக்கம் என்பதுதான் எதார்த்த உண்மை. அதனால்தான் வெற்றி தோல்விகளைக் கடந்து, எப்போதும் அங்கே தொண்டர்களும் தலைவர்களும் உற்சாகமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எதிர்பாராத ஒரு தோல்வியைச் சந்தித்த ஒரு கட்சி, இதே போன்ற எழுச்சியோடு இந்தியாவில் எங்கேயாவது எழுந்து நின்று களமாடிக் கொண்டிருக்கிறதா என்று சொன்னால், “இல்லை” என்றுதான் சொல்வேன்.

மேற்கு வங்கத்திலே பாரதிய ஜனதா கட்சிக்குச் சிம்ம சொப்பனமாக இருந்த மம்தா பானர்ஜி, தோல்விக்குப் பின்னாலே இன்னும் எழவில்லை; அவர் எழ முயற்சிக்கும் பொழுதெல்லாம் பல இடையூறுகள் அங்கே ஏற்படுகின்றன. கேரளாவிலே நம்முடைய இடதுசாரித் தோழர்கள் ஆட்சியை இழந்தார்கள்; இழந்த பின்னாலே உடனடியாக மக்களைச் சந்தித்தார்களா என்று சொன்னால், “இல்லை” என்றுதான் நான் சொல்வேன். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியை இழந்திருக்கக்கூடிய நிலையில், யாரும் எதிர்பாராத முறையில் நம்முடைய தளபதி அவர்கள் கொளத்தூர் தொகுதியிலே வெற்றி வாய்ப்பை இழந்திருக்கக்கூடிய இந்தச் சூழலிலும், ஒரு வாரம் அந்தத் தேக்கம் இருந்தது, அந்த ஏக்கம் இருந்தது. ஆனால் அதன் பின்னாலே, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தொண்டர்களுக்கே உரிய வரலாற்று எழுச்சியோடு அந்தத் தொண்டர்களும் தலைவர்களும் களத்தில் இறங்கி மக்களைச் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். வெற்றி பெற்றவர்கள் மக்களைச் சென்று சந்திப்பதற்கு ஒரு மாதம் எடுத்துக்கொண்டார்கள்; ஆனால் நம்முடைய தளபதி அவர்கள் வெற்றி வாய்ப்பை இழந்த 24 மணி நேரத்தில் தொகுதிக்கு வந்தாரே! இந்தியாவுக்கே வழிகாட்டக்கூடிய ஓர் அரசியல் எழுச்சித் தலைவராக அவர் நம் முன்னாலே நிற்பதற்கு அதுதான் காரணம்.

**கலைஞர்: மூன்று தலைமுறைகளைக் கட்டிப்போட்ட பன்முக ஆளுமை!**

தொண்டர்களிடம் வலி, குடும்பத்தினரிடமும் கூடச் சோகம், கட்சி அரசியலைத் தாண்டிப் பொதுமக்களிடம் ஒரு மிகப்பெரிய அனுதாப அலை; ஆனால் அவர் முடங்கிக் கிடக்கவில்லை. அறிவாலயத்திற்கு வருகிறார், தொகுதிக்கு வருகிறார். தொகுதிக்கு வந்த நிலையிலும், “என்னை ஏமாற்றிவிட்டீர்களே” என்று ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. “நல்லா வாயில் வருது” என்றது போன்ற வார்த்தைகளை எல்லாம் அவர் விடவில்லை. “நான் உயர்ந்தவன், கலைஞரால் வளர்க்கப்பட்டவன்” என்பதை நிரூபிக்கும் விதமாக அந்தத் தொகுதி மக்களிடம் பார்த்துப் பார்த்து நன்றியைச் சொல்லிவிட்டு வந்தாரே! அப்படிப்பட்ட தளபதி அவர்களுடைய இந்த இயக்கத்தில்தான், இன்றைய தினம் கலைஞர் இல்லாவிட்டாலும் கலைஞருடைய பிறந்த தினத்திலே அவரைப் பற்றிப் பேசுவதற்காக நாம் இங்கே கூடியிருக்கின்றோம்.

கலைஞருடைய அரசியல் என்பது சாதாரண அரசியல் அல்ல. 14 வயதிலே பயணத்தைத் தொடங்கிய அவர், 94 வயது வரையிலும் இந்தியாவுடைய கவனத்தைப் பெற்ற தலைவராக இருந்திருக்கிறார். இந்தியாவிலேயே 50 ஆண்டு காலம் பத்திரிகைகளிலே முதல் பக்கச் செய்தியில் இடம்பெற்ற ஒரே அரசியல் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் மட்டும்தான். வேறு யாருக்காவது இப்படி ஒரு வரலாறு உண்டா? கலைஞருடைய காலத்திலே ஓடத் தொடங்கியவர்கள், ஓட்டத்தை நிறுத்தி இருக்கிறார்கள் அல்லது ஓட முடியாமல் தவித்திருக்கிறார்கள்; ஆனால் மூன்று தலைமுறைத் தமிழர்களையும் கட்டிப்போட்ட ஒரே தலைவராகக் கலைஞர் தமிழ்நாட்டிலே வாழ்ந்து சென்றிருக்கிறார். பெரியாருடைய புரட்சிகரச் சிந்தனைகளை, அண்ணாவின் கனவுகளைத் தன் ஆட்சிக் காலத்தில் செயல்படுத்திய ஒரு மாபெரும் தலைவராகத் தமிழ்நாட்டினுடைய வரலாற்றிலே தடம் பதித்துச் சென்றிருக்கிறார்.

வேறு எந்தத் தலைவருக்கும் கிடைக்காத வரலாற்றுச் சிறப்புகள் கலைஞருக்கு உண்டு. தான் எதையெல்லாம் நினைத்தாரோ, அதையெல்லாம் ஆட்சிக் காலத்திலே செயல்படுத்தினார். அவர் ஓர் அரசியல் தலைவராக மட்டும் இருந்ததில்லை; மிகச் சிறந்த இலக்கியவாதியாக இருந்தார். அவருடைய செயல்பட்ட வாழ்நாளிலே சராசரியாக ஒவ்வொரு நாளும் ஐந்து முதல் எட்டு பக்கங்கள் எழுதிக்கொண்டே இருந்திருக்கிறார். அது இதழியல் துறையாக இருக்கட்டும், இலக்கியத் துறையாக இருக்கட்டும்; அவர் எழுதுவதை நிறுத்தியதில்லை, பேச்சை நிறுத்தியதில்லை. தன்னுடைய சிந்தனைகளை, செயல்பாடுகளை முரசொலியிலே வெளிப்படையாகக் கொட்டித் தீர்த்த ஒரே அரசியல் தலைவராக அவர்தான் இருந்தார். யாருக்காவது சிலேடையாகச் செய்தி சொல்ல வேண்டும் என்று சொன்னால், … என்ற பகுதியைப் பார்க்கலாம்.

உலகிலேயே எனக்குத் தெரிந்து, பத்திரிகையாளர்களை எல்லோரும் சந்திப்பார்கள்; ஆனால், பத்திரிகையாளர்களைச் சந்திக்க முடியாத நேரத்தில் கூட, பத்திரிகையாளர்கள் கேட்கக்கூடிய கேள்விகளைக் ‘கேள்விபதில்’ என்ற பெயரிலே அறிக்கையாகத் தயாரித்து வெளியிட்ட ஒரே அரசியல் தலைவர் கலைஞர்தான். அதிலே நக்கல் இருக்கும், நையாண்டி இருக்கும், சிலேடையான செய்திகள் இருக்கும், தொண்டர்களை உற்சாகமூட்டக்கூடிய வார்த்தைகள் இருக்கும். இன்று இந்தியாவிலே அந்த இடத்திலே வேறு எந்தத் தலைவராவது இருக்கிறாரா? யோசித்துப்பாருங்கள்.

ஆழமான செய்திகளைக் கூட எளிமையான வார்த்தைகளில் எழுதக்கூடிய ஆற்றல்மிக்க எழுத்தாளராக இருந்தார். உலக அரசியலையும் பேசக்கூடிய ஒரு தலைவராக இருந்தார்; உலக அரசியல் நிகழ்வுகளை உன்னிப்பாகக் கவனித்து, அதையும் முரசொலியிலே கட்டுரையாகத் தீட்டக்கூடிய ஓர் அரசியல் பன்னாட்டு ஆளுமையாகவும் இருந்தார். இதையெல்லாம் மறக்க முடியுமா? அடிக்கடி சொல்லுவார், “இன்று இடதுசாரிகள் நம்மிடம் இல்லாமல் இருக்கலாம்; நான் தி.மு.க.வில், திராவிட இயக்கத்தில் இணையாமல் இருந்திருந்தால், கம்யூனிச இயக்கத்தில்தான் இருந்திருப்பேன்” என்று சொல்லக்கூடிய ஒரு சோஷலிசக் காதலராக இருந்தார் கலைஞர்.

கலைஞருடைய ஆட்சிக் காலத்திலே அவர் முன்னெடுத்த ஒவ்வொரு திட்டங்களையும் வரிசைப்படுத்திப் பார்க்கின்றோம்; அனைத்திலும் சமூக நீதி இருந்தது, மனிதநேயம் நிறைந்திருந்தது. அவருடைய ஒவ்வொரு மேடையும் பாடம் எடுத்தது, அரசியல் வகுப்பு எடுக்கப்பட்டது. அந்த அரசியல் வகுப்பிலே உருவான எண்ணற்றவர்கள் மத்திய அமைச்சர்களாக இருந்தார்கள், மாநில அமைச்சர்களாக இருந்தார்கள், சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தார்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்தார்கள், அரசியல் அதிகாரத்தில் கோலோச்சியவர்களாக இருந்தார்கள். எல்லோரையும் தன்னுடைய உரையின் மூலமாக, எழுத்தின் மூலமாக மாணவர்களாக மாற்றிய பெருமை கலைஞருக்குத்தான் உண்டு.

**எதிர்ப்புகளையும் துரோகங்களையும் வென்ற வரலாறு!**

எத்தனை எத்தனை இடர்ப்பாடுகளை அவர் சந்தித்து வந்தார்! கலைஞர் சந்தித்த இடர்ப்பாடுகளை வேறு எந்தத் தலைவராவது சந்தித்திருந்தால், அரசியலை விட்டே அவர்கள் விலகிப் போயிருந்திருப்பார்கள். வாழ்நாள் முழுக்கப் போராட்டங்கள், வாழ்நாள் முழுக்க எதிர்ப்புகள், வாழ்நாள் முழுக்க நம்பிக்கைத்துரோகங்கள்… இவற்றையெல்லாம் கடந்து ஓர் இயக்கத்தைத் தத்துவ இயக்கமாகவே வளர்த்தெடுத்தாரே, அந்த ஆளுமைக்கு நிகர் ஏது? திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தொண்டர்களுக்கு ஆட்சியில் இருக்கும்போதும் சரி, ஆட்சியில் இல்லாதபோதும் சரி, அரிய அரசியல் கருத்துக்களை எடுத்துக் கூறிக்கொண்டே வந்தார்; அதுதான் கலைஞர்.



கலைஞருடைய அரசியல் அறிக்கையிலே ஒரு தத்துவம் இருக்கும், ஒரு வரலாற்றுச் செய்தி இருக்கும். யாராவது ஒரு தலைவர் இறந்துவிட்டால், உடனடியாக அவருடைய இரங்கல் அறிக்கையைப் பார்த்தால், நமக்கே தெரியாத, அந்தக்கட்சியுடைய குடும்பத்தினருக்கே தெரியாத, அந்தக் கட்சியினுடைய தொண்டர்களுக்கே தெரியாத பல செய்திகளை அவர் பட்டியலிட்டிருப்பார். வார்த்தைகளிலே அவருடைய வசீகரத்தை, எதிரிகளும் பாராட்டினார்கள். இப்படிப்பட்ட எண்ணற்ற சிறப்புகளுக்குச் சொந்தக்காரராகக் கலைஞர் வாழ்ந்தார்; வாழ்ந்தது மட்டுமல்ல, தன்னுடைய உடன்பிறப்புகளையும் அதே பாதையிலே அழைத்துச் சென்றார்.

அரசியலிலே சாதுரியமாக எதை எப்படிப் பேசுவது என்பது, இந்தியாவிலே கலைஞர் வாழ்ந்த காலத்திலே பார்க்கின்ற போது எந்தத் தலைவருக்கும் இல்லாத ஒரு கலையாக இருந்தது. தன்னுடைய நண்பர்களைக் கூடச் சிலேடையாகக் கிண்டல் செய்வதிலே கலைஞருக்கு நிகர் யாரும் இல்லை.

ஒரு நாள் பாண்டிச்சேரியில் இருந்தவாறு கவிஞர் கண்ணதாசன், கலைஞரைத் தொலைபேசியிலே தொடர்பு கொள்கிறார். கண்ணதாசன் சொல்கிறார், “நான் பாண்டிச்சேரியில் நிற்கலாம் என்று கருதுகிறேன்” என்று சொல்கிறார்; உடனடியாக கலைஞர் சொல்கிறார், “உன்னால் பாண்டிச்சேரியில் நிற்க முடியாது” என்று சொல்கிறார். எப்படிப்பட்ட வார்த்தை ஜாலங்கள்!

ஒருமுறை அதே கண்ணதாசன் சொல்கிறார், “நான் வெளிநாட்டுக்குச் செல்கிறேன், உங்களுக்கு என்ன வாங்கி வர வேண்டும்?” என்று கேட்கிறார்; உடனே கலைஞர் சொல்கிறார், “நல்ல பெயரை வாங்கி வா” என்று சொல்கிறார். இப்படிப்பட்ட உரையாடல்களை எந்த மாநிலத்தில் எந்தத் தலைவரிடம் பார்க்க முடியும்?

ஒருமுறை அறிவாலயத்திலே கலைஞர் கடுமையான மனவிரக்தியோடு இருக்கிறார். ஒரு கூட்டம் நடக்கிறது, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய செயற்குழு கூட்டமா அல்லது வேறு என்ன கூட்டம் என்று தெரியவில்லை; கலைஞர் ஒருவகையான அதிருப்தியில் “பேச மாட்டேன்” என்று சொல்கிறார். அந்த நேரத்திலே ஒரு தொண்டர் எழுந்து, “கலைஞரே, நீங்கள் இரண்டு வார்த்தையாவது பேச வேண்டும்” என்று சொல்கிறார். உடனே கலைஞர் சொல்கிறார், “சரி அமரு, நீ கேட்டது இரண்டு வார்த்தை; அந்த இரண்டு வார்த்தையை நான் கூறிவிட்டேன்” என்று சொல்கிறார். இப்படி எல்லாம் பேசுவதற்கு, உரையாடுவதற்கு யாராவது இருக்கிறார்களா?

**பராசக்தியின் புரட்சியும் புதிய ஆட்சியின் மீதான விமர்சனமும்!**

அவருடைய சட்டமன்ற உரைகள் இலக்கியங்களாக இருந்தன. பராசக்தி படத்தைப் பாருங்கள்; இன்றும் பலர் நடிக்கிறார்கள், தங்களுடைய நடிப்பை அரசியல்மயப்படுத்துகிறோம் என்று கூறுகிறார்கள். ஒரு பராசக்தி ஏற்படுத்திய தாக்கத்தை உங்களுடைய ஒரு வசனம் ஏற்படுத்தி இருக்குமா? மொத்தத் தமிழ்நாட்டையும் புரட்டிப்போட்ட புரட்சிக்குப் பராசக்தி படம் ஒரு காரணமாக இருந்தது. முழுநீளப் படத்தையும் கடைசி நேரத்திலே நீதிமன்ற வசனமாக நான்கரை நிமிடத்தில் சொல்லி முடித்த அரசியல் … சொந்தக்காரர் கலைஞர். முழுநீளத் திரைப்படத்தின் செய்திகளையும் அந்த நான்கரை நிமிட நீதிமன்ற வசனங்களிலே சொன்னாரே, அப்படிப்பட்ட எழுத்து வல்லமை இன்றைய அரசியல் தலைவர்கள் யாருக்காவது உண்டா?

**அனைத்து துறையிலும் தடம் பதித்தவர் கலைஞர்!**

சில தலைவர்கள் எழுத்தாளர்களாக இருப்பார்கள், சில தலைவர்கள் பேச்சாளர்களாக இருப்பார்கள், சில தலைவர்கள் களப்பணியாளர்களாக இருப்பார்கள்; ஆனால் கலைஞர் அப்படி அல்ல. சிறந்த எழுத்தாளராக, சிறந்த பேச்சாளராக, சிறந்த நிர்வாகியாக மட்டுமல்லாமல், சிறந்த இலக்கியவாதியாகவும் இருந்தார். பேரறிஞர் அண்ணா இறந்த நேரத்தில் அவர் எழுதி வாசித்த அந்தக்கவிதை ஏராளம்:”நிழலாய் இருந்தாய் நீயே நிலத்தடியில், நிழல் தேடச் சென்றது நியாயம்தானா?”என்று கேட்கிறார். உலக அரசியலிலே தென்னாப்பிரிக்காவுடைய வரலாற்றைப் பேசாமல் யாரும் கடந்து போய்விட முடியாது. நெல்சன் மண்டேலா இறந்தவுடன் அடுத்த நாள் முரசொலியில் எழுதுகிறார்:”கருப்பு நிலா கரைந்தது!”ஒரே வார்த்தை, “கருப்பு நிலா கரைந்தது.” எவ்வளவு பெரிய சோகத்தை மூன்று வார்த்தைகளிலே சொல்ல முடியக்கூடிய அரசியல் ஞானம் கலைஞரிடம் இருந்தது. இன்று அப்படிப்பட்ட தலைவர்களை நீங்கள் அடையாளம் காட்ட முடியுமா?

அண்ணா அறிவாலயம் எழுந்து நிற்கிறது; அண்ணா அறிவாலயத்தினுடைய கலைஞருடைய குறும்படச் செய்திகள் ஒளிபரப்பாகின்றன, அனைத்தும் ஆவணப்படுத்தப்பட்டிருக்கிறது. நீங்கள் கேட்கலாம், வட இந்தியாவிலே எத்தனையோ தலைவர்கள் இருந்தார்கள்… ராம் மனோகர் லோகியா இருந்தார்;ஜெயப்பிரகாஷ் நாராயணன் இருந்தார்;நேரு இருந்தார்;இந்திரா காந்தி இருந்தார்; எண்ணற்ற வட இந்தியத் தலைவர்கள் இருந்தார்கள். அவர்களுக்குப் பின்னாலே பல கட்சிகள் தேசியக் கட்சிகளாகவும் இருந்தன, மாநிலக் கட்சிகளாகவும் இருந்தன. அங்கெல்லாம் வரலாறு ஆவணப்படுத்தப்பட்டிருக்கிறதா? அந்தத் தலைவருடைய உழைப்பு ஆவணப்படுத்தப்பட்டிருக்கிறதா? ஆனால் கலைஞர் தான் எண்ணியதைச் செய்தார், செய்ததை எல்லாம் வரலாறாக ஆவணப்படுத்தினார்!

**அசாதாரணமான உழைப்பு!**

காலையில் 5 மணிக்கு விழிப்பில் தொடங்கி, யோகா போன்ற உடற்பயிற்சிகளைச் செய்து, காலையிலேயே பத்திரிகைகளைப் பார்த்துவிட்டு… அந்தப் பத்திரிகைகளிலே நம் கட்சியைச் சேர்ந்தவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களைப் பற்றிய செய்தி வந்தால், 6 மணிக்கே தொலைபேசியிலே தொடர்பு கொண்டு, “உன்னைப் பற்றி இந்தச் செய்தி வந்திருக்கிறது, உனக்குத் தெரியுமா?” என்று கேட்டு, அந்தத் தொண்டனையும் விழிப்படையச் செய்து, ஆரோக்கியமாகச் சிந்திக்க வைத்தவர் கலைஞர். காலை ஆறு மணிக்கு அசராமல் தொண்டர்களிடம் பேசக்கூடியவராக இருந்தார் கலைஞர்; அந்த உழைப்பு சாதாரண உழைப்பா?

இரவு 8 மணி வரை அறிவாலயத்திலே மக்களையும் தொண்டர்களையும் சந்தித்துவிட்டு, 9 மணிக்கு உறங்கச் செல்லவில்லை; இரவு உணவை உண்டுவிட்டு, அடுத்த நாள் முரசொலிக்குக் கட்டுரை எழுதி, தொண்டர்களுக்குத் தேவையான செய்திகளையும் அறிக்கைகளாக எழுதி, விடியற்காலம் அவர்களுக்குக் கொண்டு சேர்க்கக்கூடிய அளவிற்கு அயராமல் உழைத்துக் கொண்டிருந்தாரே, அந்த உழைப்புக்கு ஈடு இணை ஏது? அந்த உழைப்புதான் இன்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆற்றல்மிக்க தலைவராக இருக்கக்கூடிய அண்ணன் தளபதி முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களை உற்சாகமாக இயங்க வைக்கிறது. எதிர்பாராத ஒரு தோல்வியைச் சந்தித்த பின்னாலும் துணிச்சலோடு களமாடிக் கொண்டிருக்கிறாரே, துணிச்சலோடு தொண்டர்களோடு வலம் வந்து கொண்டிருக்கிறாரே… இந்தத் தைரியத்தை, இந்த அரசியல் துணிச்சலை எது தந்தது? பெரியாரின் சிந்தனைகள் கொடுத்தது, அண்ணாவின் சிந்தனைகள் கொடுத்தது, கலைஞரின் சிந்தனைகள் கொடுத்தது! தொடரோட்டமாக இருக்கக்கூடிய ஒரு திராவிட இயக்கத்தினுடைய எழுச்சியும் வளர்ச்சியும்தான், இன்று தி.மு.க.வை உயிர் துடிப்புமிக்க ஒரு கட்சியாக இயக்கிக் கொண்டிருக்கிறது.

நான் அடித்துச் சொல்வேன், இந்தியாவிலே பல மாநிலக் கட்சிகள் எமர்ஜென்சி காலத்திலே உருவாகின; அவையெல்லாம் எமர்ஜென்சி முடிந்த பின்னாலே காணாமல் போயின. இன்னும் பல மாநிலக் கட்சிகள் இருக்கின்றன; அதனுடைய தலைவர்கள் தத்துவங்களைப் பேசுகிறார்கள். மம்தா பானர்ஜி பேசாத தத்துவமா? லாலுஅவர்களுடைய மகன் தேஜஸ்வி யாதவ் பேசாத தத்துவமா? உத்தரப் பிரதேசத்திலே சமாஜ்வாதி கட்சியினுடைய தலைவர் முலாயம் சிங் யாதவினுடைய மகன் அகிலேஷ் யாதவ் பேசாத தத்துவமா? அவர் பேசுகிறார், அரசியலைப் பேசுகிறார், சமூக நீதியைப் பேசுகிறார்; நான் சொன்ன தலைவர்களும் பேசுகிறார்கள். ஆனால், இரண்டாம் கட்டத் தலைவர்களுக்கு அந்தச் சிந்தனை கடத்தப்பட்டதா? “இல்லை.” ஆனால் தி.மு.க.வில்தான் தளபதி என்ன நினைக்கிறாரோ, கடைசி நிலைத் தொண்டனும் அதேபோல் நினைக்கிறான். தொண்டர்களை அரசியல் படுத்திய இயக்கம் தி.மு.க., தொண்டர்களை ஜனநாயகப்படுத்திய இயக்கம் தி.மு.க.; அதனால்தான் தோல்விகளைக் கடந்து நிற்கிறது.

**யானை படுத்தாலும் குதிரை உயரம்!**

சமீபத்திலே ஒரு பத்திரிகையாளர் சந்திப்பில் என்னைக் கேட்டார்கள், “பெரிய தோல்வியைத் தி.மு.க சந்தித்துவிட்டதே, திராவிடக் கட்சிகளினுடைய எதிர்காலம் என்ன?” என்றெல்லாம் கேட்டார்கள். நான் சொன்னேன், “யானை படுத்தாலும் குதிரை உயரம்; தி.மு.க. தோற்றாலும் அதற்கென்று ஒரு கம்பீரம் இருக்கிறது” என்று சொன்னேன். இன்றைய அரசியலிலே டெல்லியில் இருக்கக்கூடிய அரசியல் சூழ்ச்சியாளர்கள் திட்டம் போடுகிறார்கள், “தி.மு.க.வைத் தனிமைப்படுத்த வேண்டும், அ.தி.மு.கவை பிளவுபடுத்தி அழிக்க வேண்டும்” என்று சொல்கிறார்கள். நான் சொன்னேன், இந்தத் திட்டத்தோடு ஏற்கனவே ஒரு முழக்கத்தை எச். ராஜா முன்வைத்தார்; “கழகங்கள் இல்லாத தமிழ்நாடு, கவலைகள் இல்லாத தமிழ்நாடு” என்பதைத்தான் சொன்னார். அப்போது சொன்னேன், “நாங்கள் தனிமைப்படுத்தப்படவில்லை; எங்கள் கூட்டணியில் இருக்கக்கூடிய சிலர் நகர்ந்திருக்கலாம். ஆனால் எங்கள் கூட்டணி அப்படியே இருக்கிறது;உயிர்த்துடிப்போடு இருக்கிறது;நாங்கள் எல்லாம் இருக்கின்றோம். போனவர்கள் கூட அடித்த பந்தைப் போலத் திரும்பி வருவதற்கான வாய்ப்புகள் உண்டு. அதே நேரத்தில், அ.தி.மு.கவைப் பந்தாடியது போல் தி.மு.க.வை உங்களால் பந்தாட முடியாது” என்று சொன்னேன். ஏனென்று சொன்னால், இது ஒரு தத்துவ இயக்கம், ஒரு கொள்கை இயக்கம்!

மம்தா பானர்ஜியின் மீது நான் மரியாதை கொண்டவன், அவருடைய எழுச்சியான அரசியலை ரசிக்கக்கூடியவன்; ஆனால், தன் தொண்டர்களை, நிர்வாகிகளை அவர் தத்துவமயமாக்கி இருந்தால், இன்று திரிணாமுல் காங்கிரஸ் இப்போதைய சோதனைகளைச் சந்தித்திருக்காது, இதுதான் உண்மை. ஆனால் தி.மு.க. எதைப் பற்றியும் கவலைப்படாமல் துணிச்சலோடு களமாடுகிறது என்று சொன்னால், தத்துவம் இவர்களை இயக்கிக் கொண்டிருக்கிறது, திராவிடம் இவர்களை இயக்கிக் கொண்டிருக்கிறது!

இப்போது இந்த நேரத்திலே தமிழ்நாட்டிலே புதிதாக ஆட்சிக்கு வந்திருக்கிறார்கள்; ஆட்சிக்கு வந்தவர்கள் எப்படி வந்தார்கள்?ஏன் வந்தார்கள்? என்பதைப் பற்றி விவாதங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால், இந்த ஆட்சிக்கு வந்தவர்கள், இந்த ஆட்சியை எவ்வாறு பார்க்கிறார்கள்? இவர்களை ஏன் எதிர்க்கிறோம்? சொன்னார்கள், “அவர்களும் தானே மதச்சார்பின்மை பேசுகிறார்கள், அவர்களும்தானே சமூக நீதி பேசுகிறார்கள்” என்று சொல்கிறார்கள். ஆனால் சமூக நீதியும், மதச்சார்பின்மையும் காகிதத்தில் எழுதி வைத்திருக்கக்கூடிய அறிக்கைகள் அல்ல; நடைமுறை வாழ்க்கையில் செயல்படுத்தக்கூடிய சமூகவியல் திட்டங்கள்! அந்தத் திட்டங்களைத் திராவிட முன்னேற்றக் கழகம் துணிச்சலாகப் பேசுகிறது; அந்த அரசியல் திட்டத்தோடு திராவிட முன்னேற்றக் கழகம் நகர்கிறது. “சமரசம் இல்லாமல் நாங்கள் இப்படித்தான் இருக்கிறோம்” என்று சொல்கிறது. இப்படி வெளிப்படையாகப் பேசக் கூடிய துணிச்சல் இன்று ஆட்சியில் இருப்பவர்களிடம் இருக்கிறதா?

சமீபத்திலே நகர்வுகளைப் பார்க்கிறோம், எல்லோருக்கும் தெரிந்த செய்தி, முஸ்லிம் பெருமக்கள் பக்ரீத் பண்டிகை என்று சொல்லக்கூடிய ஹஜ் பெருநாள் அன்று ஆடு, மாடு, ஒட்டகங்களை இறைவனுக்காகக் குர்பானி கொடுப்பார்கள். நீதிமன்றத்திற்குச் சென்று திடீரென்று ஒரு தடை உத்தரவைப் பெற்று, ஒரு சூழ்ச்சி நடைபெற்று, “அவையெல்லாம் தடுக்கப்பட வேண்டும்” என்ற உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது. இந்த நேரத்தில் ஓர் அரசு என்ன செய்திருக்க வேண்டும்? அரசியல் சாசனச் சட்டம் தந்த உரிமைகளின் அடிப்படையில், “அவர்களுடைய கலாச்சாரத்தை, பண்பாட்டை, மத நம்பிக்கையை அவர்கள் பேணுகிறார்கள்” என்பதை அரசு சொல்லி இருக்க வேண்டும். ஆனால்அதிகாரிகள்வீட்டுக்குள்ளே இருந்த கால்நடைகளை எல்லாம் கைப்பற்றிச் செல்லக்கூடிய சூழல் நடந்ததா, இல்லையா? நீங்கள் வணிகத்துக்காக அவ்வாறு பொது இடங்களிலே யாராவது அத்துமீறல் செய்தால் நீங்கள் தடுக்கலாம்; வருடத்திற்கு ஒருமுறை அவர்கள் தன்னுடைய மத நம்பிக்கையின் அடிப்படையில் செய்யக்கூடிய ஒரு நம்பிக்கையைத் தடுத்து நிறுத்தக்கூடிய வேலைகளைச் செய்திருக்கிறீர்கள்.

அதுமட்டுமல்ல, “ஏதோ அதிகாரிகள் தவறு செய்துவிட்டார்கள்” என்று நாம் நினைக்கலாம்; இரண்டு நாட்களுக்கு அப்புறம் அதே உயர் நீதிமன்றத்திலே அரசுத் தரப்பில் வழக்கறிஞர் சொல்கிறார், “நீங்கள் சொன்ன எல்லா வேலையையும் சிறப்பாகச் செய்து முடித்துவிட்டோம்” என்று. அப்போது என்ன அர்த்தம் இது? இது என்ன உத்தரப் பிரதேசமா?இது என்ன குஜராத்தா? இதை மேல்முறையீடு செய்யக்கூடிய துணிச்சல் இந்த அரசுக்கு இல்லை! இந்த அரசுக்குச் சிலர் பாதுகாப்பாக இருப்பதாகச் சொல்கிறார்கள்; நீங்கள் எந்த முடிவை வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளுங்கள், அது உங்கள் கட்சியினுடைய உள்விவகாரங்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் நீங்கள் இருந்ததனால்தான் உங்களுக்கு மக்கள் வாக்களித்தார்கள்; இந்த உண்மையை நீங்கள் சொல்லாவிட்டாலும் மனதிலே நிறுத்திக்கொள்ளுங்கள். அங்கே சென்றீர்களே, இது போன்ற தவறுகளை நீங்கள் தட்டிக் கேட்கிறீர்களா? முட்டுக் கொடுக்கிறீர்கள், மௌனம் காக்கிறீர்கள்; இதைத்தான் நாங்கள் சுட்டிக்காட்டுகின்றோம். இந்த அராஜகங்களை, ஒரு சமூக மக்களின் மத நம்பிக்கைகளைப் பாழ்ப்படுத்தக்கூடிய வேலைகள் நடக்கின்ற போது, ஒரு முதலமைச்சர் வேடிக்கை பார்க்கலாமா, மௌனம் காக்கலாமா?

**வேடிக்கை பார்க்கும் முதல்வர்!**

புதிது புதிதாக இன்று அரசியல் சந்தைக்குச் சரக்குகள் வந்து சேருகின்றன; அவர்களுடைய நோக்கம் என்ன தெரியுமா? “தி.மு.க., அண்ணா தி.மு.க.” என்ற அரசியல் நிலையைத் தகர்க்க வேண்டும். “இப்பொழுது தி.மு.க., தவெக” என்ற நிலையை உருவாக்கிவிட்டோம் என்று உள்ளுக்குள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். அடுத்து அவர்களுடைய திட்டம் என்ன தெரியுமா, கனவு என்ன தெரியுமா? அது நடக்கப்போவதில்லை என்பது வேறு விஷயம். தி.மு.க.வை நகர்த்திவிட்டு, அந்த இடத்திலே “த.வெ.க. தங்களுக்கு விருப்பமுள்ள ஒருவர்” என்று மாற்ற நினைக்கிறார்கள். எல்லோரும் பெருசாகப் பேசுகிறார்கள்,அண்ணாமலை அவர்கள் கட்சி ஆரம்பிக்கப் போகிறார், அவர் பின்னாலே ஒரு பெரிய இளைஞர் கூட்டம் புறப்படப் போகிறது, அவர் மாற்று அரசியலைச் செய்யப் போகிறார் என்று; அது ஏமாற்று அரசியலாக இருக்கப் போகிறது என்பதை மக்கள் மறந்துவிடக் கூடாது. அண்ணாமலை என்ன மோடியினுடைய தவறான அரசியலைக் கண்டித்துவிட்டு தனியாகக் கட்சி ஆரம்பிக்கிறாரா? அண்ணாமலை என்ன இந்தி எதிர்ப்பை, இந்தி ஆதிக்கத் திணிப்பை எதிர்த்துவிட்டு கட்சி ஆரம்பிக்கிறாரா? அண்ணாமலை என்ன நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை முழங்கிவிட்டு அரசியல் கட்சி ஆரம்பிக்கிறாரா? அண்ணாமலை என்ன மாநில உரிமைகளைக் காக்க வேண்டும் என்று குரல் கொடுத்துவிட்டு கட்சி ஆரம்பிக்கிறாரா? அமித்ஷாவுடன் பேசி முடிவெடுத்துவிட்டு, “இனி பா.ஜ.க. தமிழ்நாட்டில் நிலைக்காது; பா.ஜ.க.வினுடைய நிலை தேய்நிலை, எனவே தமிழ்நாட்டு அரசியலுக்கு ஏற்பத் தங்களுடைய கொள்கைகளை அமல்படுத்துவதற்கு ஒரு கட்சி வேண்டும்” என்று, ஒரு கட்சியைத்

தொடர்ச்சி 6 ஆம் பக்கம்